www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

வகுப்பு : 12

தேர்வு எண் | | | | | | |

# முதல் இடைப் பருவத் தேர்வு - 2024

நேரம் : 1.30 மணி]

## கணக்குப்பதிவியல்

[மொத்த மதிப்பெண்கள் : 50

பகுதி – I

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 10X1=10

1. நிலை அறிக்கை ஒரு
   அ) வருமானம் மற்றும் செலவுகள் அறிக்கை ஆ) சொத்துகள் மற்றும் பொறுப்புகள் அறிக்கை
   இ) ரொக்க நடவடிக்கைகளின் தொகுப்பு ஈ) கடன் நடவடிக்கைகளின் தொகுப்பு
2. தொடக்கநிலை அறிக்கை வழக்கமாக தயாரிக்கப்படுவது
   அ) தொடக்கமுதல் கண்டறிய ஆ) இறுதி முதல் கண்டறிய
   இ) அவ்வாண்டின் இலாபம் கண்டறிய ஈ) அவ்வாண்டின் நட்டம் கண்டறிய
3. உரிமையாளரின் சொத்துகள் ₹ 85,000 மற்றும் பொறுப்புகள் ₹ 21,000 எனில், அவருடைய முதல் தொகை
   அ) ₹ 85,000 ஆ) ₹ 1,06,000 இ) ₹ 21,000 ஈ) ₹ 64,000
4. பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு ஒரு
   அ) பெயரளவு கணக்கு ஆ) சொத்து கணக்கு
   இ) ஆள்சார் கணக்கு ஈ) பிரதிநிதித்துவ ஆள்சார் கணக்கு
5. வருவாய் மற்றும் செலவினக் கணக்கு ஒரு
   அ) பெயரளவு கணக்கு ஆ) சொத்து கணக்கு
   இ) ஆள்சார் கணக்கு ஈ) பிரதிநிதித்துவ ஆள்சார் கணக்கு
6. ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக பெற்ற நன்கொடை
   அ) வருவாயின வரவு ஆ) முதலின வரவு இ) வருவாயினச் செலவு ஈ) முதலினச் செலவு
7. கூட்டாளிகளிடமிருந்து நிறுவனம் கடன்கள் பெற்றிருந்தால், அக்கடன்களுக்கு இந்திய கூட்டாண்மைச் சட்டம், 1932–ன் படி வழங்கப்படும் வட்டி வீதம்
   அ) ஆண்டுக்கு 8% ஆ) ஆண்டுக்கு 12% இ) ஆண்டுக்கு 5% ஈ) ஆண்டுக்கு 6%
8. பின்வருவனவற்றில் எது சரியற்ற இணை?
   அ) எடுப்புகள் மீது வட்டி – முதல் கணக்கில் பற்று வைக்கப்பட வேண்டும்
   ஆ) முதல் மீது வட்டி – முதல் கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டும்
   இ) கடன் மீது வட்டி – முதல் கணக்கில் பற்று வைக்கப்பட வேண்டும்
   ஈ) இலாபப் பகிர்வு – முதல் கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டும்.
9. எடுப்பு மீது வட்டி, முதல் மீது வட்டி மற்றும் ஊதியம் கழித்தபின் உள்ள இலாபம் ₹ 10,500. கீதா என்ற கூட்டாளி கழிவுக்குப்பின் உள்ள நிகர இலாபத்தில் 5% கழிவு பெற உரியவராயின் கழிவுத்தொகையை கண்டறியவும்.
   அ) ₹ 50 ஆ) ₹ 150 இ) ₹ 550 ஈ) ₹ 500
10. ஒரு கூட்டாளி ஒவ்வொரு மாத நடுவிலும் ஒரு குறிப்பிட்ட தொகையை வழக்கமாக எடுத்துக் கொள்ளும்போது, அந்த எடுப்புகள் மீது கணக்கிடப்படும் வட்டிக்குரிய மாதங்கள் சராசரியாக
    அ) 5.5 மாதங்கள் ஆ) 6 மாதங்கள் இ) 12 மாதங்கள் ஈ) 6.5 மாதங்கள்

பகுதி – II

ஏதேனும் 5 வினாக்களுக்கு விடையளி. 5x2=10

11. முழுமை பெறா பதிவேடுகள் என்றால் என்ன?
12. நிலை அறிக்கை என்றால் என்ன?
13. இலாப நோக்கற்ற அமைப்பின் முதலின வரவுகளின் ஏதேனும் நான்கினைத் தரவும்.



Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

14. பின்வரும் தகவல்களிலிருந்து இலாபம் அல்லது நட்டம் கண்டறியவும்.

| விவரம் | ₹ |
|---|---|
| 2018, ஜனவரி 1 அன்று முதல் | 2,20,000 |
| 2018, டிசம்பர் 31 அன்று முதல் | 1,80,000 |
| அவ்வாண்டில் கொண்டு வந்த கூடுதல் முதல் | 40,000 |
| அவ்வாண்டில் எடுப்புகள் | 50,000 |

15. பின்வரும் விவரங்கள் ஒரு விளையாட்டு மன்றத்தின் இறுதிக் கணக்குகளில் எவ்வாறு தோன்றும்?

| விவரம் | ₹ |
|---|---|
| விளையாட்டுப் பொருள்கள் இருப்பு (01.04.2018) | 3,000 |
| நடப்பாண்டில் வாங்கிய விளையாட்டுப் பொருள்கள் | 9,000 |
| நடப்பாண்டில் விற்பனை செய்த பழைய விளையாட்டுப் பொருள்கள் | 500 |
| விளையாட்டுப் பொருள்கள் இருப்பு (31.03.2019) | 4,000 |

16. 2018, ஜனவரி 1 அன்று பேகம் மற்றும் பாத்திமா என்ற கூட்டாளிகள் முதல் கணக்குகள் முறையே ₹ 50,000 மற்றும் ₹ 40,000 இருப்பினைக் காட்டியது. 2018, அக்டோபர் 1 அன்று பேகம் கூடுதல் முதலாக ₹ 10,000 கொண்டு வந்தார் மற்றும் 2018, மே 1 அன்று பாத்திமா கொண்டு வந்த கூடுதல் முதல் ₹ 9,000. டிசம்பர் 31, 2018 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய முதல் மீது வட்டி ஆண்டுக்கு 4% கணக்கிடவும்.

17. கவிதா என்பவர் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளி. அவர் வழக்கமாக ஒவ்வொரு மாதமும் ₹ 2,500 எடுத்துக் கொள்கிறார். எடுப்புகள் மீது வட்டி ஆண்டுக்கு 4% கணக்கிடப்பட வேண்டும். எடுப்புகள் மீது வட்டி சராசரி கால முறையைப் பயன்படுத்தி கீழ்க்கண்ட சூழ்நிலைகளில் கணக்கிடவும். அவர்

(i) ஒவ்வொரு மாதத் தொடக்கத்தில் எடுத்திருந்தால் (ii) ஒவ்வொரு மாத இடையில் எடுத்திருந்தால்

(iii) ஒவ்வொரு மாத இறுதியில் எடுத்திருந்தால்

## பகுதி – III

ஏதேனும் 5 வினாக்களுக்கு விடையளி. (கட்டாய வினா எண்: 24) 5x3=15

18. முழுமை பெறா பதிவேடுகளின் இயல்புகள் யாவை?

19. வருவாய் மற்றும் செலவினக் கணக்கு என்றால் என்ன?

20. கூட்டாண்மை ஒப்பாவணத்தின் உள்ளடக்கங்கள் ஏதேனும் ஆறினைத் தரவும்.

21. பின்வரும் விவரங்களிலிருந்து விடுபட்ட தகவலைக் காணவும்.

| விவரம் | ₹ |
|---|---|
| 2018, ஏப்ரல் 1 அன்று முதல் | 40,000 |
| 2019, மார்ச் 31 அன்று முதல் | 50,000 |
| அவ்வாண்டில் கொண்டு வந்த கூடுதல் முதல் | 7,000 |
| அவ்வாண்டில் இலாபம் | 8,000 |
| அவ்வாண்டில் எடுப்புகள் | ? |

22. பின்வரும் விவரங்களிலிருந்து அவ்வாண்டில் மேற்கொண்ட மொத்த விற்பனையை கண்டறியவும்.

| விவரம் | ₹ |
|---|---|
| 2018, ஜனவரி 1 அன்று கடனாளிகள் | 1,30,000 |
| அவ்வாண்டில் கடனாளிகளிடமிருந்து ரொக்கம் பெற்றது | 4,20,000 |
| விற்பனைத் திருப்பம் | 35,000 |
| வாராக்கடன் | 15,000 |
| 2018, டிசம்பர் 31 அன்று கடனாளிகள் | 2,00,000 |
| ரொக்க விற்பனை | 4,60,000 |



Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

23. பின்வரும் விவரங்கள் ஒரு மன்றத்தின் 2017, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய இறுதிக் கணக்குகளில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டவும். அந்த மன்றம் 2016-2017 ஆம் ஆண்டில் பெற்ற சந்தா : ₹ 40,000. இதில் 2015-16 ஆம் ஆண்டிற்குரிய சந்தா ₹ 5,000 மற்றும் 2017. 2018 ஆம் ஆண்டிற்குரிய சந்தா ₹ 3,000 உள்ளடக்கியுள்ளது. 2016-2017 ஆம் ஆண்டிற்குரிய சந்தா ₹ 1,000 இன்னும் பெற வேண்டியுள்ளது.

24. காரைக்குடி விளையாட்டு மன்றத்தின் 2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய இறுதிக் கணக்குகளில் பின்வருவனவற்றுள் எவ்வாறு தோன்றும் எனக் காட்டவும்.

| விவரம் | ₹ |
|---|---|
| 2018, ஏப்ரல் 1 அன்று தொடர்விளையாட்டுப் போட்டி நிதி | 90,000 |
| 2018, ஏப்ரல் 1 அன்று தொடர்விளையாட்டுப் போட்டி நிதி முதலீடு | 90,000 |
| தொடர்விளையாட்டுப் போட்டி நிதி முதலீடு மீதான வட்டி பெற்றது | 9,000 |
| தொடர் விளையாட்டுப் போட்டி நிதிக்கான நன்கொடை | 10,000 |
| தொடர்விளையாட்டுப் போட்டிச் செலவுகள் | 60,000 |

## பகுதி – IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். **3x5=15**

25. அ) ராஜ் முறையான கணக்கேடுகளைப் பின்பற்றுவதில்லை. அவருடைய பதிவேடுகளிலிருந்து பெறப்பட்ட தகவல்கள் பின்வருமாறு.

| விவரம் | 1.1.2018 ₹. | 31.12.2018 ₹. |
|---|---|---|
| கைரொக்கம் | 80,000 | 90,000 |
| சரக்கிருப்பு | 1,80,000 | 1,40,000 |
| கடனாளிகள் | 90,000 | 2,00,000 |
| பற்பல கடனீந்தோர் | 1,30,000 | 1,95,000 |
| வங்கிக் கடன் | 60,000 | 60,000 |
| செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 80,000 | 45,000 |
| பொறி மற்றும் இயந்திரம் | 1,70,000 | 1,70,000 |

அவ்வாண்டில் அவர் கொண்டு வந்த கூடுதல் முதல் ₹. 50,000 மற்றும் அவர் வியாபாரத்திலிருந்து தன்னுடைய சொந்த பயனுக்காக மாதந்தோறும் ₹. 2,500 எடுத்துக்கொண்டார். மேற்கண்ட தகவல்களிலிருந்து இலாப நட்ட அறிக்கை தயாரிக்கவும். **(அல்லது)**

ஆ) பின்வரும் தகவல்களிலிருந்து மன்னன் மற்றும் சேவகன் எனும் கூட்டாளிகளின் முதல் கணக்குகளை அவர்களின் முதல் மாறுபடும் முதலாக இருக்கும்போது தயாரிக்கவும்.

| விவரம் | மன்னன் ₹ | சேவகன் ₹ |
|---|---|---|
| 2018, ஜனவரி 1 அன்று முதல் (வரவிருப்பு) | 2,00,000 | 1,75,000 |
| 2018 ஆம் ஆண்டின் எடுப்புகள் | 40,000 | 35,000 |
| எடுப்புகள் மீதான வட்டி | 1,000 | 500 |
| 2018 ஆம் ஆண்டின் இலாபப் பங்கு | 21,000 | 16,500 |
| முதல் மீது வட்டி | 12,000 | 10,500 |
| ஊதியம் | 18,000 | - |
| கழிவு | - | 2,500 |

26. அ) கீழே கொடுக்கப்பட்ட தகவல்களிலிருந்து மதுரை அன்னை தெரசா மகளிர் மன்றத்தின் 2018 டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கை தயார் செய்யவும்.

| விவரம் | ₹. | விவரம் | ₹. |
|---|---|---|---|
| ரொக்க இருப்பு (1.1.2018) | 2,000 | தீக்காப்பீட்டு முனைமம் செலுத்தியது | 1,500 |
| வங்கி இருப்பு (1.1.2018) | 3,000 | சந்தா பெற்றது | 8,500 |
| பழைய செய்தித்தாள்கள் விற்றது | 500 | அறைகலன் வாங்கியது | 6,000 |
| எழுதுபொருள்கள் வாங்கியது | 6,000 | செய்தித்தாள்கள் வாங்கியது | 700 |



Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

| | | | |
|---|---|---|---|
| தணிக்கைக் கட்டணம் செலுத்தியது | 2,000 | அறைகலன் மீதான தேய்மானம் | 900 |
| நுழைவுக் கட்டணம் பெற்றது | 3,000 | ரொக்க இருப்பு (31.12.2020) | 2,500 |
| பல்வகைச் செலவுகள் | 6,000 | போக்குவரத்துச் செலவுகள் | 1,000 |
| உதவித்தொகை அளித்தது | 2,000 | அறைகலன் விற்றது | 4,000 |
| முதலீடுகள் மீதான வட்டி | 2,000 | | |

(அல்லது)

ஆ) பாண்டியன் தன்னுடைய கணக்கேடுகளை இரட்டைப்பதிவு முறையில் பராமரிப்பதில்லை. பின்வரும் விவரங்களிலிருந்து 31-12-2018 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வியாபார மற்றும் இலாபநட்டக் கணக்கு மற்றும் அந்நாளைய இருப்புநிலைக் குறிப்பு தயாரிக்கவும்.

| விவரம் | 1-1-2018 ₹ | 31-12-2018 ₹ |
|---|---|---|
| அறைகலன் | 30,000 | 30,000 |
| கைரொக்கம் | 10,000 | 17,000 |
| கடனாளிகள் | 40,000 | 60,000 |
| சரக்கிருப்பு | 28,000 | 11,000 |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 12,000 | 35,100 |
| வங்கிக் கடன் | 25,000 | 25,000 |
| கடனீந்தோர் | 15,000 | 16,000 |

**கூடுதல் தகவல்கள்:**

| | | | |
|---|---|---|---|
| ரொக்க விற்பனை | 11,200 | கடன் விற்பனை | 88,800 |
| ரொக்கக் கொள்முதல் | 4,250 | கடன் கொள்முதல் | 35,750 |
| கொள்முதல் மீதான தூக்குக்கூலி | 3,000 | விற்பனை மீதான தூக்குக்கூலி | 700 |
| கழிவு பெற்றது | 600 | வங்கிக் கடன் மீது வட்டி | 2,500 |
| எடுப்புகள் | 8,000 | கூடுதல் முதல் | 14,000 |
| சம்பளம் | 8,900 | அலுவலக வாடகை | 2,400 |

**சரிக்கட்டுதல்கள்:**

அறைகலன் மீது 5% தேய்மானம் போக்கெழுதவும். கடனாளிகள் மீது 1% ஐயக்கடன் ஒதுக்கு உருவாக்கவும்.

27. அ) நிலைமுதல் முறைக்கும் மாறுபடும் முதல் முறைக்கும் இடையேயான வேறுபாடுகளைத் தரவும்.

(அல்லது)

ஆ) கீழ்க்காணும் கும்பகோணம் கூடைப்பந்து சங்கத்தின் பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கிலிருந்து 2018, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கைத் தயார் செய்யவும்.

| பெறுதல்கள் | ₹ | ₹ | செலுத்தல்கள் | ₹ | ₹ |
|---|---|---|---|---|---|
| இருப்பு கீ/கொ | | | மைதான வாடகை செலுத்தியது | | 12,000 |
| கைரொக்கம் | 23,000 | | அச்சுக் கட்டணம் | | 5,000 |
| வங்கி ரொக்கம் | 12,000 | 35,000 | வங்கிக்கட்டணம் | | 1,000 |
| அரங்க வாடகை பெற்றது | | 6,000 | கட்டடம் மீதான காப்பீடு | | 2,000 |
| சந்தா பெற்றது | | 9,000 | தொடர்விளையாட்டுப் போட்டிச்செலவுகள் | | 16,000 |
| ஆயுள் உறுப்பினர் கட்டணம் | | 7,000 | தணிக்கைக் கட்டணம் | | 3,000 |
| பாதுகாப்பு பெட்டக வாடகைப் பெற்றது | | 2,000 | விளையாட்டுப் பொருள்கள் வாங்கியது | | 4,000 |
| | | | இருப்பு கீ/இ | | |
| | | | கைரொக்கம் | 2000 | |
| | | | வங்கி ரொக்கம் | 14000 | 16,000 |
| | | **59,000** | | | **59,000** |



Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com